Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

48

அனுப்புநர்:-

திரு.ரா.கிருஷ்ணமூர்த்தி,பி.இ.,
துணை இயக்குநர் /உதவி இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
31, கண்கொடுத்த பிள்ளையார் கோவில் தெரு,
நெ.1, காமராஜர் சாலை,
மயிலாடுதுறை மாவட்டம்-609 001.
Email:- dtcpomayiladuthurai@gmail.com
தொலைப்பேசி எண்: 04364-291 900.

பெறுநர்:-

வட்டார வளர்ச்சி அலுவலர்,
செம்பனார்கோயில்
ஊராட்சி ஒன்றியம்,
மயிலாடுதுறை மாவட்டம்.

ந.க.எண். 68/2022/மமா2 நாள்: .03.2022

அய்யா,

பொருள்:- மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - மயிலாடுதுறை மாவட்டம் - தரங்கம்பாடி வட்டம் - செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம் ஆக்கூர் ஊராட்சி – ஆக்கூர் பண்டாரவாடை கிராமம் - நில அளவை எண்: **68/1A1, 1B1, 1C1,2A, 74/A1**-ல் - 13.450.00ச.மீ (3.324 ஏக்கர்) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான அனுமதி / இசைவு - வழங்குதல் குறித்து.

பார்வை:
1 மனுதாரர் திரு.**K.** நெடுஞ்செழியன் அவர்களின் விண்ணப்பம் நாள்: 29.10.2021, 01.02.2022 மற்றும் 03.03.2022.
2 துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம் கடிதம் ந.க.எண்.1305/2021/நாமா2 நாள்:18.11.2021.
3 நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ நாள்:24.12.2020 மற்றும் 20.02.2021
4 அரசாணை (நிலை) எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:04.06.2004
5 அரசாணை (நிலை) எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்:04.05.2017.
6 அரசாணை எண்: 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020
7 அரசாணை எண்: 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ருனு4(3) நாள்: 23.09.2020
8 அரசாணை எண்: 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை **UD**4(1) நாள்: 09.12.2020
9 அரசு கடிதம் எண்.19113/நவ 4(3)/2017-1,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்:30.08.2017
10 நகர் ஊரமைப்பு ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 13686/2017/**LA1** நாள்: 08.09.2017
11 மாவட்ட ஆட்சித் தலைவர், மயிலாடுதுறை கடிதம் நி.மு.8099/2021/ஊ3 நாள்.13.10.2021

*****

பார்வை 1-ல் சுட்டிய மனுதாரர் கடிதங்களுடன் பெறப்பட்ட - மயிலாடுதுறை மாவட்டம் - தரங்கம்பாடி வட்டம் - செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம் ஆக்கூர் ஊராட்சி – ஆக்கூர் பண்டாரவாடை கிராமம் - நில அளவை எண்: **68/1A1, 1B1, 1C1,2A, 74/A1**-ல் - 13.450.00ச.மீ (3.324 ஏக்கர்) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் / இசைவுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய 18.11.2021 நாளிட்ட துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம் கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 1-ல் சுட்டிய மனுதாரரது 01.02.2022 நாளிட்ட கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு பகுதி மற்றும் மின்சார வாரிய ஒதுக்கீடு பகுதி ஆகியவற்றினை உள்ளாட்சிக்கு தானமாக தானப்பத்திர எண்.199/2022-ன் மூலம் ஒப்படைக்கப்பட்டு அசல் பத்திரம் பெறப்பட்டுள்ளது.

2).மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/மா.ந.ஊ.அ(ம.மா)எண்.01/2022 என எண்ணிடப்பட்டு இரண்டு அசல் வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3).மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4).உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரபதிவு அலுவலகத்திற்கும், நிலஅளவை துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறும் தெரிவிக்கப்படுகிறது.

5).செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மனுதாரரால் பார்வை 4-ல் கண்ட அரசாணையின்படி மனைகளுக்கான நன்னிலை வரி ரூ.17400/- அரசு தலைப்பில் 02.02.2022-லும், கூராய்வு கட்டணம் ரூ.20500/- இவ்வலுவலக வங்கி கணக்கில் 28.10.2021- லும் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் கொடிநாள் நிதி ரூ.3500/-க்கு கேட்பு வரைவோலை பெறப்பட்டுள்ளது.

சிறப்பு நிபந்தனை:-

1.(a) பார்வை 8-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 6-ல் கண்ட **TNCDBR-2019** விதி எண்.47(11)-ன் படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் **"Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants" After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of local body shall be issued to the applicant(s) directly.**

(டி).மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் **"Shall collect the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of local body shall be issued to the applicant(s) directly, Only after ensure that the applicant lays tar roads, provide other amenities like storm water drains water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the local body"**

2). **(EWS)** பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட மூன்று வருடங்களுக்கு மேலாகியும் **EWS** மனைகள் விற்க இயலாத நிலையிருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,நாள்:31.01.2020-ன் படி **EWS** மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3).பார்வை 9 மற்றும் 10-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4). **"The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertises, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any real Estate project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority"**-ன் படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5).பார்வை 5-ல் கண்டுள்ள அரசாணையின் படி திட்டமில்லாத பகுதியில் அமையும் மனைப்பிரிவு என்பதால் விதி எண்.3-ன் படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-மட்டும் உள்ளாட்சி கணக்கில் பெற்றுக் கொண்டும் மற்றும் விதி எண்.9-ன் படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலபயன் மாற்றக் கட்டணமாகவும் கீழ் கண்ட தலைப்பில் உள்ளாட்சியால் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

கணக்குத் தலைப்பு:-

IFHRM code: 0217 60 800 AS – 22709

6) பார்வை 11-ல் கண்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், மயிலாடுதுறை மாவட்டம் அவர்களின் கடிதத்தில் உத்தேச புல எண்களுக்கு வேளாண்மை அல்லாத பிற உபயோகத்திற்கு பயன்படுத்த ஆட்சேபனை இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

துணை இயக்குநர் / உதவி இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மயிலாடுதுறை மாவட்டம்

இணைப்பு:-

1. ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் -3 எண்ணம்
2. மனைப்பிரிவு நிபந்தனைகள் - 3 தொகுப்பு
3. தானப்பத்திரம் அசல்-1

நகல்:-

1 திரு.**K**.நெடுஞ்செழியன்,
மெயின்ரோடு,
செம்பனார்கோவில்,
தரங்கம்பாடி வட்டம்
மயிலாடுதுறை மாவட்டம். — கடிதம் மட்டும்

2 செயலாளர் (திட்டம்),
தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையர் (**TNRERA**)
1ஏ, காந்தி இர்வின் பாலம் ரோடு
முதல் தளம், எழும்பூர், சென்னை-600008.

3 வைப்பறை (வரைபடம்-1 (ம) நிபந்தனைகள் -1)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
மயிலாடுதுறை மாவட்டம்.

கோப்பு எண்:**68/2022/** மமா2 நாள்: .03.2022

மனைப்பிரிவு வரைபடம் ம.வ./மா.ந.ஊ.அ(ம.மா)எண்.**01/2021**

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1) நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் மற்றும் அளவுகள், பொது ஒதுக்கீடுகளின் அளவுகள் ஆகியவற்றை மாறுதல் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு **(Splay)** அமைக்கப்பட வேண்டும்.

3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே **TNCDBR-2019**-ல் குறிப்பிட்டுள்ள **Residential use**-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5) மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

6) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7) 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8) மனுதாரர் மனைப்பிரிவு தொடர்புடைய செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

9) அ.மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி/இசைவு **(Planning Permission / Concurrence)** மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ.மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10 மனுதாரர், நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்பதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயில் **6'×4'** அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11 மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12 நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு **Planning Permission / Concurrence** ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட **Planning Permission / Concurrence** ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13 விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்</u>

விவரம்		பரப்பளவு	விழுக்காடு
மனைப்பரிவு இடத்தின் பரப்பளவு	--	13,450.00 ச.மீ	
ஒதுக்கிய மனைகள்	--	39	
<u>பொது ஒதுக்கீடு</u> மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது		1,005.00 ச.மீ	
2.உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள்	--	3,467.43 ச.மீ	
3.உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு	--	50.00 ச.மீ	**0.50%**
4.தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது	--	50.00 ச.மீ	**0.50%**
<u>விற்பனைக்குரியவை</u> **EWS** மனைகளின் பரப்பு	--	1019.60ச.மீ	**10.21%**
மனை எண்கள்	--	40 to 58	

K. h...

துணை இயக்குநர்/ உதவி இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மயிலாடுதுறை மாவட்டம்

10.3.22

53

செம்பனார்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.ஜெ.[illegible]

ந.க.எண்:1085/2022/அ1 நாள்: 15.07.2022

பொருள்: மனைப்பிரிவு வரன்முறை – செம்பனார்கோவில் வட்டாரம் – ஆக்கூர் ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண்:68/1A1,1C1,27,74/A1-ல் 13450 சமீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து உத்தரவிடல்.

பார்வை:
1.அரசாணை நிலை எண்:78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (UD4 (3)) நாள்:04.05.2017
2.அரசாணை எண்:172 வீட்டுவசதிமற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (UD4(3)) நாள்:13.10.2017
3. துணை இயக்குநர்/உதவி இயக்குநர்(பொ)மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மயிலாடுதுறை அவர்களின் ந.க.எண்:68/2022/மமா2 நாள்:21.03.2022
4. ஆக்கூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் தீர்மான எண்.771 நாள்.12.07.2022
5.தொடர்புடைய இதர ஆவணங்கள்.

****

உத்தரவு:

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ஆக்கூர் ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண்: 68/1A1,1C1,27,74/A1-ல் 13450 சமீ பரப்பளவில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவை முறைப்படுத்தி பார்வை 3-ல் காணும் துணை இயக்குநர்/உதவி இயக்குநர்(பொ)மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மயிலாடுதுறை அவர்களின் செயலாணையில் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைகளுக்கு சந்தை மதிப்பீட்டின் மொத்த தொகையில் 3% மட்டும் கூராய்வு கட்டணமாகவும் மற்றும் வளர்ச்சி கட்டணம் கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது.

1. கூராய்வு கட்டணம் 13450 சதுரமீட்டருக்கு சந்தை மதிப்பீடு ரூ.346725-இல் 3% ரூ.10402/- (ரூபாய் பத்தாயிரத்து நானூற்று இரண்டு மட்டும்) 21.06.2022 அன்று ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா,மயிலாடுதுறை கிளையில் செலுத்தப்பட்டுள்ளது.
2. வளர்ச்சி கட்டணம் 13450 சதுரமீட்டருக்கு ரூ.221950/- (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்து ஒன்றாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) 12.07.2022 அன்று ஆக்கூர் ஊராட்சி கணக்கு எண்-1-இல் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, ஆக்கூர் ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண்: 68/1A1,1C1,27,74/A1-ல் 13450 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள மனை பிரிவில் பார்வை 3-ல் காணும் உத்தரவின்படி, துணை இயக்குநர்/உ.தவி இயக்குநர்(பொ)மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மயிலாடுதுறை அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைகளின் பரப்பளவாக 13450ச.மீ மட்டும் திரு.K.நெடுஞ்செழியன் என்பவருக்கு மேற்குறித்தவாறு கூராய்வு கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தப்பட்ட மனைகளுக்கு மட்டும் பார்வை 3-ல் குறிப்பிட்டுள்ள துணை இயக்குநர்/உ.தவி இயக்குநர்(பொ)மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மயிலாடுதுறை அவர்களின் செயல்முறையில் அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
செம்பனார்கோவில்.

பெறுநர்:
திரு.K.நெடுஞ்செழியன்,
மெயின் ரோடு,
செம்பனார்கோவில்,
தரங்கம்பாடி வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம்.

நகல்: நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் மயிலாடுதுறை.
நகல்: சார்பதிவாளர், செம்பனார்கோவில்.
நகல்: ஊராட்சித் தலைவர் ஆக்கூர் ஊராட்சி
} உத்தரவு நகல்



our services doesn’t just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate